லெப். மயூரன்

(சண்முகராசா செந்தில்ராஜ்)

பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

01-03-1994 அன்று பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் நடந்த எதிர்பாராத நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

"எனக்குக் கால்வழங்காத குறையை அகற்றியவன்"

ஒரு மாவீரனின் சகோதரியினது உள்ளத்து உணர்வு

என் ஆசைத்தம்பி ராஜன்... எனக்கு இரண்டு வயதானபோது எங்கள் தாய் உன்னைப் பெற்றெடுத்தார். பிறப்பிலிருந்தே நான் நடக்கமுடியாதவள். எனது ஐந்து வயதில் நீ சிறியவனாக இருந்தபொழுதே நீ அழுகின்ற நேரத்தில் உன்னை என்மடி மீது வைத்து விளையாட்டுக் காட்டுவேன். அம்மா வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொழுது உன்னைப் பார்க்கும்படி எனக்குச் சொல்வார். அப்பொழுது நீ நன்றாக நடப் பாய்; ஓடுவாய். என் அருகில் நீ வரும் போது உன்னை இறுகப் பிடித்துவிட்டால் என்னை அடித்துவிட்டு ஓடுவாய். என்னால் நடக்கவும் முடியாது. ஓடவும் முடியாது.

''என்னைப் பிடி அக்கா'' என்பாய்.

என்னால் எப்படிப் பிடிக்க முடியும்? நான் அழுவேன். அப்பொழுது நீ ஓடிவந்து ''ஏன் அக்காஅழுகிறாய்'' என்று கேட்பாய்?

என்னால் உன்னைப் பிடிக்க முடியவில் லையே என்று சொல்லி அழுவேன்.

''ஏன் அக்கா உன்னால் ஓடமுடியாது'' என்று கேட்பாய். ''அது எனக்குத் தெரியாது'' என்பேன்.

நீ ஏழு வயதை அடையும்வரை எனக்கு சகல கடமைகளையும் அம்மாவே செய்து வந்தார்.

உனது ஏழு வயதிலிருந்து எனக்கான சகல கடமைகளையும் நீ செய்யத்தொடங் கினாய்.

மூன்று சில்லு சைக்கிளில் என்னை வைத்து அங்குமிங்கும் உருட்டித் திரிந்து, நான் நடக்கமுடியாத குறையைப் போக்கி னாய். என் கால்களாக இயங்கினாய். என்னால் நடக்கமுடியவில்லை என்ற துயரம் என்னிடம் நீங்க, எனக்குத் தம்பியாக இல்லையடா அண்ணனாகத் திகழ்ந்தாய். உன்னை என் உயிராக நேசித்தேன். நீயே நான்; நானே நீயென இருந்தோம்.

சிறு வயதினில் நாம் விளையாடிய பொழுது ஒருநாள் நடந்த சம்பவத்தை, என்னால் உயிருள்ள வரையில் மறக்க முடியாதடா. என்னை வீட்டுக்குள் சைக் கிளில் தள்ளிச் சென்றாய். நான் கொஞ்சம் உடல் பருமனானவள். தள்ளுவதற்குக் கொஞ்சம் உனக்குக் கஷ்டமாக இருந்தது அந்த நேரத்தில்.

''இந்தக் குண்டை வைச்சுத் தள்ள ஏலாது'' என்று சற்று விலகிச்சென்றாய்.

லெப். மயூரன்

(சண்முகராசா செந்தில்ராஜ்)

பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

01-03-1994 அன்று பூநகரி - கௌதாரி முனைப் பகுதியில் நடந்த எதிர்பாராத நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.

அப்போது அருகிலிருந்த மேசைமீதி லிருந்த மேசைக்கத்தியை எடுத்து எறிந் தேன். கத்தி உன் தோள்மீது பட்டது. உன் தோளிலிருந்து இரத்தம் பாய்ந்தது. அதன்பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. கண்விழித்துப் பார்த்தேன். நான் படுக்கையில் இருந்தேன். பக்கத்தில் அம்மாவும் நீயும் இருந்தீர்கள். உனது இடது தோளில் துணி கட்டப்பட்டிருந்தது அப்போது.....

''அக்கா அக்கா! இனிமேல்உன்னைக் குண்டு என்று சொல்லமாட்டேன். எவ்வ ளவு தூரம் எண்டாலும் உன்னை சைக் கிளிலைவைச்சுத் தள்ளுறன். எழும்பக்கா. நான் குண்டு என்று சொன்னபடியால்தானே நீ மயங்கிப்போனாய்'' என்று அழுதாய்.

நான் கனவு கண்டதுபோல் இருந்தது. நான் இரத்தத்தைக்கண்டு சைக்கிளில் இருந்து மயங்கி விழுந்துவிட்டேன் என்று சொன்ன பொழுது தான், என்ன நடந்த தது என்று எனக் குத் தெரிந்தது.

என் முன்கோ பத்தால் நான் செய் தகுற்ற த் தை யும் மறந்து, நான் மயங் கியதைக் கண்டு எனக்காக நீ அழுத காட்சியை, எப்படி யடா என்னால் மறக்கமுடியும்?

நாங்கள் இரு வரும் தசையும் நக மும் போல வளர்ந்து வந் தோம்.

கடந்த ஐந்து வருடத்திற்கு முன், எமது விடுதலைக்காக உன்னை நீ இணைத்துக் கொண்டாய். அன்றிலிருந்து எனது சைக்

(7 ஆம் பக்கம் பார்க்க)

எனக்குக் கால்வழங்காத...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளை நானே இயக்கிக்கொண்டிருக்கிறேன். ஏன்? எமது விடுதலைக்காகவே.....!

என்னால் எப்படியடா தாங்க முடியும்?

என் கால்களாக இயங்கி எனக்குக் கால் வழங்காத குறையைத் தீர்த்தவன்.

இரத்தக் காயத்தை நான் ஏற்படுத்தியபோதும் எனக்காக அழுதவன்.

நகமும் தசையும்போல் வாழ்ந்தவன்.

இந்த நாட்டிற்காக, மக்களுக்காக உன்னையே அர்ப்பணித்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட செய்தியைக் கேட்டு, என் இதயமே வெடித்ததுபோல் ஆனதடா.

உனது வீரச்சாவு மேலும் எமக்கு உறுதியைத் தந்துள்ளது.

உனக்கு முதலே விடுதலைப் போராட்டத்திலே எமது தந்தை இணைந்து செயற்பட்டிருந்தார்.

உனது பாதச்சுவடுகளை எம்மைப் பெற்ற தாயும் பின்பற்ற முடிவுசெய்துள்ளார்.

தாயக விடுதலைக் கனவோடு சென்ற உன் பாதச் சுவடுகள்மீது என் பாதங்களை வைத்துப் பின்தொடர முடியாதபோதும், என் சைக்கிளில் பின்தொடர்வேன். உன் கனவை நனவாக்குவேன்..... இது உறுதியடா என் அருமைத் தம்பியே!

ச. சுபாங்கினி,
(சகோதரி) ○

'வெளிச்சம்' சஞ்சிகையின் வெள்ளி இதழுக்கு அளித்த சிறப்புச் செவ்வியின்போது தலைவர் சொன்னதிலிருந்து...

"தமிழீழத்தில் போர்க்கால இலக்கியம் வளர்ந்து வருகின்றது. எமது இளம் போராளிகள் பலர் படைப்பு இலக்கியத்தில் ஆர்வம்காட்டி வருகிறார்கள் சிலரிடம் தரம்வாய்ந்த எழுத்துக்களையும், கலைப்படைப்புகளையும் அவதானிக்க முடிகின்றது. இது நல்லதொரு அறிகுறி. காலப்போக்கில் அனுபவ முதிர்ச்சியில் எமது போராளிகளிடம் இருந்து சிறந்த கலை இலக்கியப் படைப்புகளை எதிர்பார்க்கலாம். எமது போராளிகளே வரலாற்றின் கதாநாயகராக இருந்து காலத்தை நகர்த்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களே அந்தக் காலத்தைப் பதிவு செய்யும்போது அது உண்மையானதாகவும், உன்னதமானதாகவும் அமைந்துவிடுகின்றது.

தமிழரின் சரித்திரத்திலேயே இன்றைய காலம் ஒரு முக்கியமான யுகம். இன்றைய காலத்தில் கட்டவிழும் விடுதலை வரலாற்றைக் கலை இலக்கியமாக உருவகப்படுத்தி, அடுத்த தலைமுறையினரும் அறியச் செய்வதை இன்றைய சிருஷ்டிகர்த்தாக்களின் முக்கிய கடமையாக நான் கருதுகின்றேன்.

போராட்டம் பற்றியும், போர்க்கால வாழ்வு பற்றியும் ஆழமான அனுபவத்தையும், துல்லியமான பார்வையையும் கொண்டு வளர்வதால் எமது போராளிகள் சிறந்த படைப்பாளிகளாக மாறி, ஒருகாலம் உன்னதமான கலை இலக்கியங்களைப் படைப்பார்கள் என்பது, எனது நம்பிக்கை. அதனால்தான் எமது இயக்கத்தில் முளைத்து வரும் இளம் எழுத்தாளர்களையும், கலையார்வம் கொண்டவர்களையும் நான் ஊக்குவித்து வருகின்றேன்."